॥ श्री शिवपादादिकेशान्तवर्णन स्तोत्रम् ॥

॥ ஸ்ரீ சிவபாதாதி கேசாந்த வர்ணன ஸ்தோத்ரம்॥

(1)

कल्याणं नो विधत्तां कटकतटलसत्कल्पवाटीनिकुञ्ज –
क्रीडासंसक्तविद्याधरनिकरवधूगीतरुद्रापदानः ।
तारैर्हैरम्बनादैस्तरलितनिनदत्तारकारातिकेकी
कैलासः शर्वनिर्वृत्यभिजनकपदः सर्वदा पर्वतेन्द्रः ॥

கல்யாணம் நோ விதத்தாம் கடகதட
லஸத்கல்பவாடீ நிகுஞ்ஜ
க்ரீடாஸம்ஸக்த வித்யாதர நிகர
வதூ கீதருத்ராபதானஃ ।
தாரைர்ஹைரம்பநாதை ஸ்தரலித
நிநதத்தாரகா ராதிகேகீ
கைலாஸஃ சர்வநிர்வ்ருத்யபிஜனக
பதஃஸர்வதா பர்வதேந்த்ரஃ

பரமேச்வரனின் சாந்தமான வாஸஸ்தானமான கைலாஸம் என்ற மலை நமக்கெல்லோருக்கும் மங்களத்தை உண்டாக்கட்டும். அந்த மலைதாழ்வரை பிரதேசத்தில் அமைந்த கல்ப கோத்யானத்தில் விளையாடும் வித்யாதரப்பெண்மணிகளால் பாடப்படும் ஸ்ரீருத்ரனின் வீரச்செயல்களையுடையது. ஹேரம்ப விநாயகரின் உரத்த குரலால் நேகிழ்ந்து ஒலி எழுப்பும் முருகப் பெருமானின் மயில்களையுடையது.

(2)

यस्य प्राहुः स्वरूपं सकलदिविषदां सारसर्वस्वयोगं
यस्येषुः शार्ङ्गधन्वा समजनि जगतां रक्षणे जागरूकः ।
मौर्वी दर्वीकराणामपि च परिबृढः पूस्त्रयी सा च लक्ष्यं
सोऽव्यादव्याजमस्मानशिवभिदनिशं नाकिनां श्रीपिनाकः ॥

யஸ்ய ப்ராஹுஃஸ்வரூபம் ஸகல
திவிஷதாம் ஸாரஸர்ஸ்வயோகம்
யஸ்யேஷுஃ சார்ங்கதன்வா ஸமஜனி
ஜகதாம் ரக்ஷணே ஜாகரூகஃ।
மௌர்வீ தர்வீகராணாமபிச பரிவ்ருடஃ
பூஸ்த்ரயீ ஸாச லக்ஷ்யம்
ஸோऽவ்யாதவ்யாஜ மஸ்மான்
சிவ பிதநிசம் நாகினாம் ஶ்ரீபிநாகஃ॥

பரமேச்வரனின் பிநாகம் என்ற தனுஸ் தேவர்களுக்கு வரும் கெடுதலைப்போக்குவது, அது நம்மை நேர்மையாக காக்கட்டும். அது தேவர்களின் முழு பலமும் சேர்ந்த ஒரு அமைப்பு. அதன் பாணமாக உலகத்தைக்காக்கும் விஷ்ணுவே ஆனார், நாண்கயிறாக ஸர்பராஜனே ஆனார். முப்புரங்களும் அந்த வில்லின் இலக்கானது.

(3)

आतङ्कावेगहारी सकलदिविषदामङ्घ्रिपद्माश्रयाणां
मातङ्गाद्युग्रदैत्य – प्रकरतनुगलद्रक्तधाराक्तधारः ।
क्रूरः सूरायुतानामपि च परिभवं स्वीयभासा वितन्वन्
घोराकारः कुठारो दृढतरदुरिताख्याटवीं पाटयेन्नः ॥

ஆதங்காவேக ஹாரீ ஸகலதிவிஷதா
மங்க்ரி பத்மாஶ்ரயாணாம்
மாதங்காத்யுக்ரதைத்யப்ரகர
தனுகலத் ரக்ததாராக்த தாரஃ।
க்ரூரஃ ஸூராயுதானாமபி ச பரிபவம்
ஸ்வீயபாஸா வித்ன்வன்
கோராகாரஃ குடா ரோ த்ருடதர
துரிதாக்யாடவீம் பாட யேந்நஃ॥

கொடிய பயங்கரத்தோற்றமுடைய பரமேச்வரனின் அந்த மழு, நமது பாபமாகிய காட்டை வெட்டி வீழ்த்தட்டும். அந்த மழு தன்னையண்டிய தேவர்களின் தொல்லையைப் போக்குவது. மாதங்கன் முதலிய கொடிய அர்க்கர்களின் உடலில் கசிந்த ரத்ததாரையால் நனைந்த நுனியையுடையது, பத்தாயிரம் சூர்யர்களுக்கும் தனது ஒளியால் அவமானத்தையளிக்க வல்லது.

(4)

कालाराते: कराग्रे कृतवसतिरुर:शाणशातो रिपूणां
काले काले कुलाद्रिप्रवरतनयया कल्पितस्नेहलेप: ।
पायान्न: पावकार्चि:प्रसरसखमुख: पापहन्ता नितान्तं
शूल: श्रीपादसेवाभजनरसजुषां पालनैकान्तशील: ॥

காலாராதேஃ கராக்ரே க்ருதவஸதி
ருரஃ சாண சாதோ ரிபூணாம்
காலே காலே குலாத்ரிப்ரவரதனயயா
கல்பித ஸ்நேஹலேபஃ।
பாபான்நஃ பாவகார்ச்சிஃ ப்ரஸரஸகமுகஃ
பாபஹந்தா நிதாந்தம்
சூலஃ ஸ்ரீபாத ஸேவா பஜனரஸ்ஜுஷாம்
பாலனைகாந்த சீலஃ॥

காலகாலனான பரமேச்வரனின் அந்தசூலம் நம்மை காக்கட்டும். அந்த சூலம் திருவடிசேவை புரிபவர்களையும், பஜனம் செய்பவர்களையும் காப்பதில் ஒரே குறியாக உள்ளது, அவ்வப்போது பார்வதி அன்புடன் தைலலேபம் செய்வாள் அதற்கு, காலனைவதைத்த அந்த பரமேச்வரன் கையில் இருந்து கொண்டு, எதிரிகளின் மார்பாகிய சானைக்கல்லில் தீட்டப் பட்டும் மிளிர்கிறது.

(5)

देवस्याङ्काश्रयाया: कुलगिरिदुहितुर्नेत्रकोणप्रचार –
प्रस्तारानत्युदारान्पिपठिषुरिव यो नित्यमत्यादरेण ।
आधत्ते भङ्गितुङ्गैरनिशमवयवैरन्तरङ्गं समोदं
सोमापीडस्य सोऽयं प्रदिशतु कुशलं पाणिरङ्ग: कुरङ्ग: ॥

தேவஸ்யாங்காச்ரயாயாஃ குலகிரிதுஹிதுர்
நேத்ர கோணப்ரசார –
ப்ரஸ்தாரா னத்யுதாரான் பிபடிஷுரிவ
யோ நித்ய மத்யாதரேண ।

ஆதத்தே பங்கிதுங்கை ரநிசமயவை
ரந்தரங்கம் ஸமோதம்
ஸோமாபீடஸ்ய ஸோயம் ப்ரதிசது
குசலம் பாணிரங்கஃ குரங்கஃ॥

சந்திரசேகரான பரமேச்வரனின் கையில் தவழும் மான் நமக்கு க்ஷேமத்தை கொடுக்கட்டும். அந்த மான் பிரதிதினமும் உவகையோடு ஈசனின் சரீரப்பகுதியில் உறைபவளான பார்வதியின் கடைக்கண் பரவுவதையும் விரிவதையும் கற்க விரும்பியது போல் பலபடியாகத் துவளும் அவயவங்களால் மனதை மகிழ்விப்பதாக இருக்கிறது.

(6)

कण्ठप्रान्तावसज्जत्कनकमयमहाघण्टिकाघोरघोषैः
कण्ठारावैरकुण्ठैरपि भरितजगच्चक्रवालान्तरालः ।
चण्डः प्रोद्दण्डश्रृङ्गः ककुदकबलितोत्तुङ्गकैलासश्रृङ्गः
कण्ठेकालस्य वाहः शमयतु शमलं शाश्वतः शाक्वरेन्द्रः ॥

கண்டப்ராந்தா வஸஜ்ஜத்கனக மய
மஹா கண்டிகா கோரகோஷைஃ
கண்டாராவை ரகுண்டைரபி
பரிதஜகச் சக்ரவாவாந்தராலஃ
சண்டஃ ப்ரோத்தண்டச்ருங்கஃ ககுத
கவலிதோத்துங்க கைலாஸச்ருங்கஃ
கண்டேகாலஸ்ய வாஹஃ சமயது
சமலம் சாச்வதஃ சரக்வரேந்த்ரஃ

காலகண்டனாகிய பரமேச்வரனது நித்ய வாஹனமான நந்திகேச்வரன் நமது பாபத்தை அழிக்கட்டும். அவர்க நீண்ட கொம்புகளுடன் பயங்கரமானவர் மட்டுமல்ல கைலாஸ உச்சியை விட உயரமான தனது திமிலையுடையவர். மேலும் கழுத்துப்பக்கம் தொங்கும் தங்கமயமான மணிகளின் ஓசையாலும், தடையில்லாத தன் கர்ஜனையாலும் உலகம் முழுதும் நிரப்புபவராகவும் இருக்கிறார்.

(7)

निर्यद्दानाम्बुधारापरिमलतरलीभूतरोलम्बपाली –
झङ्कारैः शङ्कराद्रेः शिखरशतदरीः पूरयन्भूरिघोषैः ।
शार्वः सौवर्णशैलप्रतिमपृथुवपुः सर्वविघ्नापहर्ता
शर्वाण्याः पूर्वसूनुः स भवतु भवतां स्वस्तिदो हस्तिवक्त्रः ॥

நிர்யத்தானம்புதாரா பரிமல
தரலீபூத ரோலம்பபாலீ
ஜங்காரைஃ சங்கராத்ரேஃ சிகரசததரீஃ
பூரயன் பூரிகோஷைஃ
சார்வஃ ஸௌவர்ண சைலப்ரதிம
ப்ருது வபுஃ ஸர்வ விக்னாபஹர்த்தா
சர்வாண்யாஃ பூர்வஸூனுஃ ஸ பவது
பவதாம் ஸ்வஸ்திதோ ஹஸ்திவக்த்ரஃ॥

சிவன்–பார்வதீயின் மூத்தகுமாரனும், தங்கமலை போன்று பருத்த தேகமுடையவரும், எல்லா விக்னங்களையும் போக்குபவருமான அந்த யானை முகத்தவர் உங்களுக்கு நல்லனவற்றைப் பேஷிப்பவராய் திகழட்டும். அவர், தனது காது பக்கம் கசியும் மதஜல வாசனையால் பரபரப்பான தேனீக்களின் ஜங்கார ஒலியாலும், வேறுபலசப்தங்களாலும் கைலாஸ மலையின் உச்சியிலுள்ள பல குகைகளை நிரப்பிக் கொண்டிருப்பார்.

(8)

यः पुण्यैर्देवतानां समजनि शिवयोः श्लाघ्यवीर्यैकमत्या –
यन्नाम्नि श्रूयमाणे दितिजभटघटा भीतिभारं भजन्ते ।
भूयात् सोऽयं विभूत्यै निशितशरशिखापाटितक्रौञ्चशैलः
संसारागाधकूपोदरपतितसमुत्तारकस्तारकारिः ॥

யஃ புண்யைர் தேவதாநாம் ஸமஜநிசிவயோஃ
ச்லாக்ய வீர்யை கமத்யாத்
யந்நாம்நிச்ரூயமானே திதிஜபடகடா
பீதிபாரம் பஜந்தே ।
பூயாத்ஸோ஽யம் விபூத்யை நிசிதசர –
சிகா பாடிதக் ரௌஞ்சசைல:
ஸம்ஸாராகாத கூபோதரபதித –
ஸமுத்தாரகஸ்தாரகாரி: ॥

சிவன் - பார்வதி ஆகியோரது போற்றத்தக்க வீர்யச் சேர்க்கையால் தேவர்களின் புண்யத்தால், தோன்றியவர், அவர் பெயரைக் கேட்டாலே அசுரசைன்யமும் பயங்கொள்ளும். அவர் தனது கூரிய வேலாயுதத்தால் க்ரௌஞ்சமலையை உடைத்தெறிந்தார். ஸம்ஸாரமாகிய ஆழமான கிணற்றினடியில் விழுந்தோரை கரையேற்றி வைப்பவர். தாரகாஸுரனை வதைத்தவர். அந்த சுப்ரஹ்மண்யர் நமது செல்வச்செழிப்பிற்கு காரணமாகட்டும்.

(9)

आरूढः प्रौढवेगप्रविजितपवनं तुङ्गतुङ्गं तुरङ्गं
चेलं नीलं वसानः करतलविलसत्काण्डकोदण्डदण्डः ।
रागद्वेषादिनानाविधमृगपटलीभीतिकृद्भूतभर्ता
कुर्वन्नाखेटलीलां परिलसतु मनः कानने मामकीने ॥

ஆரூட꞉ ப்ரௌடவேகப்ரவிஜித பவனம்
துங்கதுங்கம் துரங்கம்
சேலம் நீலம் வதஸாந꞉ கரதலவிலஸத்
காண்ட கோதண்ட தண்ட꞉ ।
ராகத்வேஷாதி நாநாவிதம்ருகபடலீ
பீதிக்ருத்பூதப்ர்த்தா
குர்வந் நாகேட லீலாம் பரிலஸது
மன꞉ கானனே மாமகீநே ॥

மிகுந்த வேகத்தால் வாயுதேவனையும் வென்ற உயரமான குதிரையின் மீதேறி, நீல வஸ்த்ரம் அணிந்து, கையில் கோதண்டம் தாங்கி, ராகம், துவேஷம் முதலிய பற்பல மிருக ஸமூகத்திற்கு பீதியுண்டாக்கும் பூத நாதர் (ஐயப்பர்) எனது மனமாகிய காட்டில் வேட்டையாடும் கேளிக்கையைச் செய்து விளங்கட்டும்.

(10)

अम्भोजाभ्यां च रम्भारथचरणलताद्वन्द्वकुम्भीन्द्रकुम्भै –
र्बिम्बेनेन्दोश्च कम्बोरुपरि विलसता विद्रुमेणोत्पलाभ्याम् ।
अम्भोदेनापि सम्भावितमुपजनिताडम्बरं शम्बरारेः
शंभोः सम्भोगयोग्यं किमपि धनमिदं संभवेत् सम्पदे नः ॥

அம்போஜாப்யாம் ச ரம்பாரத சரணலதாத்வந்த்வ
கும்பீந்த்ர கும்பைஃ
பிம்பேநேந் தோஸ்ச கம்போருபரி விலஸதா
வித்ருமே ணோத்பலாப்யாம்।
அம்போதேனாபி ஸம்பாவித முபஜனிதாடம்பரம்
சம்பராரேஃ
சம்போஃ ஸம்போக யோக்யம் கிமபி தனமிதம்
ஸம்பவேத்ஸம்பதே நஃ॥

பரமேச்வரனின் ஸம்போகத்திற்குரியதான, விசித்ரமான இந்த செல்வம் எங்களது செல்வத்தை விளைவிப்பதாக ஆகட்டும். அந்த செல்வம், மன்மதனின் ஆடம்பரம் கொண்டதாக இருக்கும். இன்னும், இரண்டு தாமரைப்பூக்களோடும், வாழைமரத்தோடும், சக்ரத்தோடும், இரண்டு கொடிகளோடும், யானை மஸ்தகத்தோடும், கழுத்தின் மேல் விளங்கும் சந்திர பிம்பத்தோடும் பவழத்தோடும், நீல ஆம்பல்பூவோடும், மேகத்தோடும் ஒப்பிடும் படியாகவும் இருக்கும்.

(11)

वेणीसौभाग्यविस्मापिततपनसुताचारुवेणीविलासान्
वाणीनिर्धूतवाणीकरतलविधृतोदारवीणाविरावान् ।
एणीनेत्रान्तभङ्गीनिरसननिपुणापाङ्गकोणानुपासे
शोणान्प्राणानुदूढप्रतिनवसुषमाकन्दलानिन्दुमौलेः ॥

வேணீ ஸௌபாக்ய விஸ்மாபித
தபனஸுதா சாருவேணீவிலாஸான்
வாணீ நிர்தூத வாணீகரதல
வித்ருதோதார வீணாவிராவான்।
ஏணீநேத்ராந்தபங்கீநிரஸன நிபுணா
பாங்க கோணா நுபாஸே
சோணான் ப்ராணானு தூடப்ரதிநவ
ஸுஷமாகந்தலா- நிந்து மௌலேஃ॥

சந்திரசேகரரான பரமேச்வரனின் புத்தம் புதிய அழகுக் குவியலையுடைய சிவந்த அந்தப்ராணன்களை வழிபடுகிறேன். அந்த பிராணன் யமுனையின் நீரோட்டப்பாங்கினை விஞ்சிய பின்னலழயையுடையது. அதன் பேச்சழகால் தோற்கடிக்கப் பட்டஸரஸ்வதீயின் கையிலுள்ள வீணையின் சீரிய குரலை யுடையது, இன்னும், பென்மானின் கடைக்கண்ணழகை துரத்துவதில் தேர்ச்சிபெற்ற கடைக்கண்களையும் உடையதாய் இருக்கும்.

(12)

नृत्तारम्भेषु हस्ताहतमुरजधिमिद्धित्कृतैरत्युदारै –
श्चित्तानन्दं विधत्ते सदसि भगवतः सन्ततं यः स नन्दी।
चण्डीशाद्यास्तथान्ये चतुरगुणगणप्रीणितस्वामिसत्का –
रोत्कर्षोद्यत्प्रसादाः प्रमथपरिवृढाः पान्तु सन्तोषिणो नः॥

ந்ருத்தாரம்பேஷு ஹஸ்தாஹத முரஜ
திமித்தித்க்ருதை ரத்யுதாரைః
சித்தானந்தம் விதத்தே ஸதஸி
பகவதஃ ஸந்ததம் யஃ ஸ நந்தீ।
சண்டீசாத்யா ஸ்ததான்யே சதுர
குணகண ப்ரீணிதஸ்வாமி ஸத்கா
ரோத்கர்ஷோத்யத்ப்ரஸாதாஃ ப்ரதமபரிவ்ருடாஃ
பாந்து ஸந்தோஷிணோ நஃ॥

பரமேச்வரன் தாண்டவமாடத் தொடங்கும் பொழுது கையால் அடித்த முரசத்தின் திமித்தித் என்ற ஒலியால் பகவத் ஸதஸில் எல்லோர் மனதையும் களிக்கச் செய்யும் நந்திகேச் வரரும், சண்டிகேச்வரர் முதலிய மற்ற கணத்தலைவர்களும், தமது சீர்மை மிக்க குணங்களால் மகிழ்வித்த ஸ்வாமியின் சேவையின் மூலம் பிரஸாதம் பெற்று மகிழ்ந்திருக்கிற கணங்கள் அனைவரும் எங்களைக்காப்பார்களாக!

(13)

मुक्तामाणिक्यजालैः परिकलितमहासालमालोकनीयं
प्रत्युप्तानर्घरत्नैर्दिशि दिशि भवनैः कल्पितैर्दिक्पतीनाम् ।
उद्यानैरद्रिकन्यापरिजनवनितामाननीयैः परीतं
हृद्यं हृद्यस्तु नित्यं मम भुवनपतेर्धाम सोमार्धमौलेः ॥

முக்தாமாணிக்ய ஜாலைஃ பரிகலித
மஹா ஸால மாலோக நீயம்
ப்ரத்யுப் தாநர்க்க ரத்னைர்திசி திசி
பவனை: கல்பிதைர்திக் பதீனாம் ।
உத்யானை ரத்ரிகன்யா பரிஜன
வனிதா மானினீயைஃ பரீதம்
ஹ்ருத்யம் ஹ்ருத்யஸ்து நித்யம் மம
புவனபதேர்தாம சோமார்தமௌ: ளே:

முத்து, மாணிக்யம் இவற்றால் நிர்மிக்கப்பட்ட அழகிய பெருங் கோபுரம் ஒரு புறம், நாற்புறத்திலும் வைரம் இழைத்த திக்பாலகர்களின் மாளிகைகள் ஒரு புறம், பார்வதியின் பணிப் பெண்களுக்கென நிறுவப்பட்ட பூங்காக்கள் மற்றொரு புறம். இப்படி புவனபதியான, பிறைச்சந்திரனைத் தலையில் தரித்த பரமேச்வரனின் அழகிய இருப்பிடம் எப்பொழுதும் எங்கள் மனதில் நிறைந்திருக்கட்டும்.

(14)

स्तम्भैर्जम्भारिरत्नप्रवरविरचितैः सम्भृतोपान्तभागं
शुम्भत्सोपानमार्गं शुचिमणिनिचयैर्गुम्भितानल्पशिल्पम् ।
कुम्भैः सम्पूर्णशोभं शिरसि सुघटितैः शातकुम्भैरपङ्कैः
शम्भोः सम्भावनीयं सकलमुनिजनैः स्वस्तिदं स्यात् सदो नः ॥

ஸ்தம்பைர் ஜம்பாரிரத்னப்ரவர விரசிதைஃ
ஸம்ப்ருதோபாந்த பாகம்
சும்பத் ஸோபான மார்கம் சுசிமணி
நிசயைர் கும்பிதா நல்பசில்பம்।
கும்பைஃ ஸம்பூர்ண சோபம் சிரஸி
ஸுகடிதைஃ சாத கும்பை ரபங்கைஃ
சம்போஃ ஸம்பாவனீயம் ஸகல முனிஜனை
ஸ்வஸ்திதம் ஸ்யாத் ஸதோ நஃ॥

இந்திர நீலக்கற்களால் வடிக்கப்பட்ட தூண்கள் சுற்றுப் புறங்களில் தாங்கி நிற்க, பளபளப்பான படிக்கட்டுக்களை யுடையதும் சுத்தரத்னகற்கள் இழைத்த சிற்ப வேலைகள் நிரம்பிய கலசங்கள் மேற்புறத்தில் அமையப் பெற்றதும், இப்படி முனிவராலும் போற்றிப்புகழப்பட்ட பரமேச்வரனின் ஸபா பவனம் எங்கள் க்ஷேமத்தை வளர்ப்பதாக இருக்கட்டும்.

(15)

न्यस्तो मध्ये सभायाः परिसरविलसत्पादपीठाभिरामो
हृद्यैः पादैश्चतुर्भिः कनकमणिमयैरुच्चकैरुज्ज्वलात्मा ।
वासोरत्नेन केनाप्यधिकमृदुतरेणास्तृतो विस्तृत श्रीः
पीठः पीडाभरं नः शमयतु शिवयोः स्वैरसंवासयोग्यः ॥

ந்யஸ்தோ மத்யே ஸபாயாஃ பரிஸர
விலஸத்பாதபீடாபிராமோ
ஹ்ருத்யைஃ பாதைஃ சதுர்பிஃ கனகமணிமயை
ருச்சகை ருஜ்வலாத்மா ।
வாஸோரத்னேன கேநாப்யதிக
ம்ருதுதரேணாஸ்த்ருதோ விஸ்தருகஸ்ரீஃ
பீடஃபீடாபரம் நஃசமயது சிவயோஃ
ஸ்வைரஸம்வாஸ யோக்யஃ ॥

சுற்றுப்புறங்களில் பாத பீடங்கள் விளங்க ஸபையின் நடுவில் அழகிய நான்கு தங்கமயமான உயர்ந்த கால்களுடன் விளங்கும் பீடம், மிக மெல்லிய சிறந்தபட்டாடையால் விரிக்கப் பட்டதாய் ஓங்கிநிற்கிறது. அப்பீடம் சிவனும் சிவையும் அமரத்தக்கதாக இருந்து கொண்டு எங்கள் பீடைகளை அகற்றட்டும்.

(16)

आसीनस्याधिपीठं त्रिजगदधिपतेरङ्घ्रिपीठानुषक्तौ
पाथोजाभोगभाजौ परिमृदुलतलोल्लासिपद्मादिरेखौ ।
पातां पादावुभौ तौ नमदमरकिरीटोल्लसच्चारुहीर –
श्रेणीशोणायमानोन्नतनखदशकोद्भासमानौ समानौ ॥

ஆஸீநஸ்யாதிபீடம் த்ரிஜகததிபதே
ரங்க்ரி பீடானுஷக்தௌ
பாதோஜாபோக பாஜௌ பரிம்ருதுல
தலோல்லாஸிபத்மாதி ரேகௌ ।
பாதாம் பாதாவுபௌ தௌ நமதமர
கிரீடொல்லஸச்சாரு ஹீர-
ஸ்ரேணீ சோணாயமாநோந்நத நக
தசகோத்பாஸமானௌ ஸமானௌ ॥

பீடத்தில் அமர்ந்திருக்கும் மூவுலகுக்கும் ஈசனான பரமேச்வரனது மிதியடியில் பதிந்த தாமரை மலரையொத்த இரண்டு கால்கள் எங்களை காக்கட்டும். மழமழப்பான அக்கால்களில் பத்மம் சங்கம் என்ற கோடுகள் பதிந்துள்ளன. காலடியில் வணங்கும் தேவரின் தலைக்கிரீடத்தில் பதித்த வைரங்கள் வரிசையால் சிவப்பேரிய உயர்ந்த பத்து நகங்கள் ஒன்று போல விளங்குகன்றன.

(17)

यन्नादो वेदवाचां निगदति निखिलं लक्षणं पक्षिकेतो –
र्लक्ष्मीसम्भोगसौख्यं विरचयति ययोश्चापरे रूपभेदे ।
शम्भोः सम्भावनीये पदकमलसमासङ्गतस्तुङ्गशोभे
माङ्गल्यं नः समग्रं सकलसुखकरे नूपुरे पूरयेताम् ॥

யந்நாதோவேதவாசாம் நிகததி
நிகிலம் லக்ஷணம் பக்ஷிகதுঃ (தோঃ)
லக்ஷ்மீஸம்போக ஸௌக்யம்
விரசயதி யயோஸ்சாபரே ரூபபேதே!
சம்போঃ ஸம்பாவநீயே பதகமல
ஸமா ஸங்கதஸ்துங்கசோபே
மாங்கல்யம் நঃஸமக்ரம் ஸகல
ஸுகரே நூபுரே பூரயேதாம்।

எந்த இரு நூபுரங்களின் ஒலி வேதங்களின் இலக்கணம் முழுவதையம் எடுத்துரைக்கிறதோ, எந்தநூபுரங்களின் மற்றொரு அமைப்பில் (உருவத்தில்) விஷ்ணுவுக்கு லக்ஷ்மீதேவயின் சேர்க்கை சுகத்தை நல்குகின்றனவோ அந்த நூபுரங்கள் தற்போது சிவனின் திருவடித் தாமரைகளையண்டியுள்ளதால் மதிப்புடன் இருப்பதோடு மிக்க அழகோடும் மிளிர்கின்றன. அவை எமக்கு அனைத்து மங்களங்களையும் நிறைவேற்ற வேண்டுமே!

(18)

अङ्गे शृङ्गारयोनेः सपदि शलभतां नेत्रवह्नौ प्रयाते
शत्रोरुद्धृत्य तस्मादिषुधियुगमथो न्यस्तमग्रे किमेतत् ।
शङ्कामित्थं नतानाममरपरिषदामन्तरङ्कूरयत्तत्
सङ्घातं चारु जङ्घायुगमखिलपतेरंहसां संहरेन्नः ॥

அங்கே ச்ருங்காரயோநேঃஸபதி
சலபதாம் நேத்ர வஹ்நௌப்ரயாதே
சத்ரோருத்ருத்ய தஸ்மாதிஷீதியுக
மதோ ந்யஸ்த மக்ரே கிமேதத் ।
சங்காமித்தம் நதாநாமமர பரிஷதா
மந்தரங்கூரயத்தத்
ஸங்காதம் சாரு ஜங்காயுகமகில
பதே ரம்ஹஸாம் ஸம்ஹரேந்நঃ॥

மன்மதன் உடல் பரமனின் மூன்றாவது கண்ணில் ஈசலாகியபின் அவனது இரு அம்பராத்தூணிகள் தானோமுன் வைக்கப்பட்டுள்ளன? எனதேவர்கள் மனதிற்சந்தேஹிக்குமாறு அமைந்த சர்வேசனின் முழங்கால்கள் எங்கள் பாபத்திறனை அழிக்கபட்டும்.

(19)

जानुद्वन्द्वेन मीनध्वजनृवरसमुद्गोपमानेन साकं
राजन्तौ राजरम्भाकरिकरकनकस्तम्भसम्भावनीयौ ।
ऊरू गौरीकराम्भोरुहसरससमामर्दनानन्दभाजौ
चारू दूरीक्रियास्तां दुरितमुपचितं जन्मजन्मान्तरे नः ॥

ஜானுத்வந்த்வேந மீனத்வஜந்ருவர
ஸமுத் கோபமானேந ஸாகம்
ராஜந்தௌ ராஜரம்பா கரிகர
கனகஸ்தம்ப ஸம்பாவனீயௌ ।
ஊரூ கௌரீகராம் போருஹஸரஸ
ஸமாமர்தனானந்த பாஜௌ
சாரூ தூரீக்ரியாஸ் தாம் துரிதமுபசிதம்
ஜன்மஜன்மாந்தரே ந: ॥

மீனத்வஜவரசன் அம்பராத்தூணி யொத்த முழங்கால்களுடன் விளங்கும் ராஜவாழை, யானைத்துதிக்கை, தங்கத்தூண் போன்ற பரமனின் தொடைகள் கௌரீ திருக்கரங்கள் வருட சுகம் துய்க்குமவை எமது பல நூறுப் பிறவிகளில் சேர்ந்துள்ள பாவங்களைப் போக்கட்டுமே!

(20)

आमुक्तानर्घरत्नप्रकरपरिष्वक्तकल्याणकाञ्ची –
दाम्ना बद्धेन दुग्धद्युतिनिचयमुषा चीनपट्टाम्बरेण ।
संवीते शैलकन्यासुचरितपरिपाकायमाने नितम्बे
नित्यं नर्नर्तु चित्तं मम निखिलजगत्स्वामिनः सोममौलेः ॥

ஆமுக்தாநர்க்க ரத்னப்ரகர பரிஷ்வக்த
கல்யாண காஞ்சீ-
தாம்னா பத்தேன துக்தத்யுதிநிசய
முஷா சீன பட்டாம்பரேண ।
ஸம்வீதே சைலகன்யாஸுசரித
பரிபாகாயமானே நிதம்பே
நித்யம் நர்நர்து சித்தம் மம நிகில
ஜகத்ஸ்வாமின: ஸோம மௌலே: ॥

விலையுயர்ந்த ரத்னங்கள் பதித்து மின்னுகின்ற கடி சூத்திரம் தரித்துள்ளதும், வெள்ளை வெளேர் என்ற சீனப் பட்டாடை தரித்துள்ளதும், பார்வதியின் புண்யம் பலித்தாற் போன்று விளங்குவதுமான உலக மனைத்தும் காக்கும் ஸ்ரீசந்த்ர சேகரரது கடிபாகத்தில் என் மனம் களிக்கட்டுமே!

(21)

सन्ध्याकालानुरज्यद्दिनकरसरुचा कालधौतेन गाढं
व्यानद्धः स्निग्धमुग्धः सरसमुदरबन्धेन वीतोपमेन।
उद्दीप्तैः स्वप्रकाशैरुपचितमहिमा मन्मथारेरुदारो
मध्यो मिथ्यार्थसध्र्यङ्मम दिशतु सदा सङ्गतिं मङ्गलानाम्॥

ஸந்த்யாகாலானு ரஜ்யத்தினகரஸ
ருசா காலதௌதேந காடம்
வ்யானத்த: ஸ்னிக்தமுக்த: ஸரஸ
முதரபந்தேன வீதோபமேந!
உத்தீப்தைர: ஸ்வப்ரகாசைருபசித
மஹிமா மன்மதாரேருதாரோ
மத்யோ மித்யார்த்தஸத்ர்யங்மம
திசது ஸதாஸங்கதிம் மங்களானாம்!!

மன்மதனின் எதிரியான மகேசன் வயிற்றுப் பாகத்தில் இறுகக்கட்டிய பட்டைக்கட்டு மிக மழமழப்பாகவும் அருமை யாகவும் உள்ளது. அது மாலை வேளைச் சூர்யன் போல் சிவப்பானது; வேறு இணையற்றது. 'இல்லை' யெனமிளிரும் அவரது இடைப்பாகம் எனக்கு மங்களங்களைக் கூட்டு விக்கட்டுமே!

(22)

नाभीचक्रालवालान्नवनवसुषमादोहदश्रीपरीताद् –
उद्गच्छन्ती पुरस्तादुदरपथमतिक्रम्य वक्षः प्रयान्ती।
श्यामा कामागमार्थप्रकथनलिपिवद्भासते या निकामं
सा मा सोमार्धमौलेः सुखयतु सततं रोमवल्लीमतल्ली॥

நாபீசக்ராலவாலாந்நவ நவஸுஷமா
தோஹ தஞீபரீதாத்
உத்கச்சந்தீ புரஸ்தாத் உதரபத
மதிக்ரம்ய வக்ஷ: ப்ரயாந்தீ ।
ச்யாமா காமாகமார்த்த ப்ரகதனலிபிவத்
பாஸதே யா நிகாமம்
ஸா மா ஸோமார்த்த மௌலே:
ஸுகயது ஸததம் ரோம வல்லீமதல்லீ ॥

தலையில் பிறைச்சந்திரனை யணிந்த பரமேச்வரனின் நாபீ மண்டலப்பாத்தியில் கிளம்பி, புதுப்புதுப்பொலிவுடன் முன்னே சென்று வயிறையும் தாண்டி மார்பையடையும் கருமையான உரோமக்கொடி, காமசாஸ்த்ரப் பொருளை உணர்த்தும் எழுத்து வரிகள் போல் விளங்குகிறது. அது எம்மை சுகமடையச் செய்யட்டுமே!

(23)

आश्लेषेष्वद्रिजायाः कठिनकुचतटीलिप्तकाश्मीरपङ्क –
व्यासङ्गादुद्यदर्कद्युतिभिरुपचितस्पर्धमुद्दामहृद्यम् ।
दक्षारातेरुदूढप्रतिनवमणिमालावलीभासमानं
वक्षो विक्षोभिताघं सततनतिजुषां रक्षतादक्षतं नः ॥

ஆச்லேஷேஷ்வத்ரிஜாயா: கடின
குசதட லிப்தகாச்மீர பங்க-
வ்யாஸங்காதுத்யதர்க த்யுதிபி
ருபசித ஸ்பர்த்த முத்தாமஹ்ருத்யம் ।
தக்ஷாராதேருதூட ப்ரதி நவமணி
மாலாவலீ பாஸமானம்
வக்ஷோ விக்ஷோபிதாகம்
ஸததநதிஜுஷாம் ரக்ஷதாதக்ஷதம் ந: ॥

தக்ஷனின் எதிரியான பரமேச்வரனின் மார்பு எங்கள் பாபத்தைப் போக்கி காக்க வேண்டுமே! அந்த மார்பு புத்தம் புதிய மணிமாலைகளால் மிக அழகாக உள்ளது. மேலும் பார்வதியை தழுவி அணையும் பொழுது விம்மிய அவள் ஸ்தனங்களில் பூசிய அகில் சந்தனச்சேர்கையால் சிவப்பேறி மிக அழகியதாய் மிளிரும்.

(24)

वामाङ्के विस्फुरन्त्या करतलविलसच्चारुरक्तोत्पलायाः
कान्ताया वामवक्षोरुहभरशिखरोन्मर्दनव्यग्रमेकम् ।
अन्यांस्त्रीनप्युदारान् वरपरशुमृगालङ्कृतानिन्दुमौले –
र्बाहूनाबद्धहेमाङ्गदमणिकटकानन्तरालोकयामः ॥

வாமாங்கே விஸ்புரந்த்யா: கரதல
விலஸச் சாருரக்தோத்பலாயா:
காந்தாயா வாமவக்ஷோருஹ பர
சிகரோன் மர்தனவ்யக்ரமேகம் ।
அன்யான் த்ரீநப்யுதாரான் வரபரசு
ம்ருகாலங்க்ருதானிந்து மௌலே:
பாஹூநாபத்தஹேமாங்கத
மணிகடகா நந்த ராலோகயாம: ॥

தன் இடதுபுறம் உடனிருக்கும் பார்வதியின் இடது ஸ்தனத்தை வருடும் ஒருகை, மற்ற மூன்று கைகளும் வரமருளவும், மழு, மான் தாங்கவும் பாங்காய், தங்கத்தோள்வளை, வைரவளை துலங்க எங்கள் மனக்கண்களில் பளிச்செனதெரிகின்றனவே!

(25)

सम्भ्रान्तायाः शिवायाः पतिविलयभिया सर्वलोकोपतापात्
संविग्नस्यापि विष्णोः सरभसमुभयोर्वारणप्रेरणाभ्याम् ।
मध्ये त्रैशङ्कवीयामनुभवति दशां यत्र हालाहलोष्मा
सोऽयं सर्वापदां नः शमयतु निचयं नीलकण्ठस्य कण्ठः ॥

ஸம்ப்ராந்தாயா: சிவாயா: பதிவிலயபியா
ஸர்வலோ கோபதாபாத்
ஸம்விக்னஸ்யாபி விஷ்ணு: ஸரபஸ
முபயோ: வாரணப்ரோணாப்யாம்!
மத்யே த்ரைசங்கவீயா மனுபவதி தசாம்
யத்ர ஹாலாஹலோஷ்மா
ஸோऽயம் ஸர்வாபதாம் ந: சமயது
நிசயம் நீலகண்டஸ்ய கண்ட:!!

ஸ்ரீநீலகண்டனின் கண்டம் எங்கள் ஆபத்துக்களை யெல்லாம் போக்கட்டும், பார்த்தாவுக்கு ஆபத்தே என்று பதறிய பார்வதீ வேண்டாம் என்றும், 'உலகமனைத்தும் அழியுமே' என்று மனமுடைந்து விஷ்ணு மற்றொருபுறம் 'சீக்ரம் விழுங் குங்கள்' என்றும் வேண்டி நிற்க, ஆலகால விஷம் எந்த கண்டத்தின் நடுவே த்ரிசங்கு நிலையில் நின்றதோ அந்த கண்டம் அல்லவா அது!

(26)

हृद्यैरद्रीन्द्रकन्यामृदुदशनपदैर्मुद्रितो विद्रुमश्री –
रुद्योतन्त्या नितान्तं धवलधवलया मिश्रितो दन्तकान्त्या ।
मुक्तामाणिक्यजालव्यतिकरसदृशा तेजसा भासमानः
सद्योजातस्य दद्यादधरमणिरसौ सम्पदां सञ्चयं नः ॥

ஹ்ருத்யை ரத்ரீந்த்ர கன்யாம்ருது
தசனபதைர் முத்ரிதோ வித்ருமஸ்ரீ:
உத்யோதந்த்யா நிதாந்தம் தவளதவளயா
மிச்ரிதோ தந்த-காந்த்யா!
முக்தா மாணிக்ய ஜால வ்யதிகர
ஸத்ருசா தேஜஸாபாஸமான:
ஸத்யோஜாதஸ்ய தத்யாததரமணி
ரஸெள ஸம்பதாம் ஸஞ்சயம் ந:!!

மலையரசன் மகளின் மெதுவான பல் முத்திரை பதிந்ததும், வெள்ளை வெளேரென பளிச்சிடும் தனது பற்காந்தியுடன் சேர்ந்து விளங்குவதுமான ஸ்தயோஜாதனனின் கீழ் உதட்டுதடம் எங்களுக்கு செல்வச் செழிப்பை உண்டாக்க வேணுமே. அந்த உதடு காண்போருக்கு முத்தும் பவழமும் ஒன்று கலந்தாற்போல் தோன்றுமே!

(27)

कर्णालङ्कारनानामणिनिकररुचां सञ्चयैरञ्चितायां
वर्ण्यायां स्वर्णपद्मोदरपरिविलसत् कर्णिकासन्निभायाम् ।
पद्वत्यां प्राणवायोः प्रणतजनहृदम्भोजवासस्य शम्भो -
र्नित्यं नश्चित्तमेतद्विरचयतु सुखेनासिकां नासिकायाम् ॥

கர்ணாலங்கார நாநாமணி நிகரருசாம்
ஸஞ்சயை ரஞ்சிதாயாம்
வர்ண்யாயாம் ஸ்வர்ணபத் மோதர பரிவிலஸத்
கர்ணிகா ஸந்நிபாயாம்!
பத்தத்யாம் ப்ராணவாயோ: ப்ரணதஜன
ஹ்ருதம் போஜ வாஸஸ்ய சம்போ:
நித்யம்: சித்தமேதத் விரசயது
ஸுகேநாஸிகாம் நாஸிகாயாம்!!

பக்த ஜனங்களின் ஹ்ருதய கமலத்தில் வசிக்கும் பரமேச்வரனின் ப்ராண வாயு ஸஞ்சரிக்கும் வழியான நாஸிகையில் எங்கள் மனம் லயிக்கட்டுமே! அந்த நாஸிகை, அவரது காதணிகளான பல இரத்தின மணிகளின் ஒளி படர்ந்தும், தங்கத்தாமரையினுள் விளங்கும் கர்ணிகைதானோ என்ற படியும் இருக்கும்.

(28)

अत्यन्तं भासमाने रुचिररुचां सङ्गमात् सन्मणीना -
मुद्यचण्डांशुधामप्रसरनिरसनस्पष्टदृष्टापदाने ।
भूयास्तां भूतये नः करिवरजयिनः कर्णपाशावलम्बे
भक्तालीभालसज्जज्जनिमरणलिपेः कुण्डले कुण्डले ते ॥

அத்யந்தம் பாஸமானே ருசிரதரருசாம்
ஸங்கமாத் ஸன்மணீநாம்
உத்யச்சண்டாம்சுதாமப்ரஸர
நிரஸன ஸ்பஷ்ட த்ருஷ்டாபதானே।
பூயாஸ்தாம் பூதயே ந: கரிவரஜயின:
கர்ணபாசாவலம்பே
பக்தாலீபால ஸஜ்ஜத் ஜனிமரணலிபே:
குண்டலே குண்டலே தே॥

கஜாஸுரனை வதைத்த மகேசனது காதுகளை அவலம்ப மாகக் கொண்டு, பக்தர்களின் நெற்றியில் பதிந்த ஜனனமரண எழுத்துக்களை 'இல்லை' யெனமாய்க்கும் அந்த குண்டலங்கள் எங்களுக்கு ஐச்வர்யம் உண்டாக்க வேண்டுமே! ஒளி மிக்கதாயும் ஒளிவீசும் பல வைரமணிகள் அமைந்ததால் உதயகாவ சூர்யனின் ஒளியையும் விஞ்சுவதாகவும் அக்குண்டலங்கள் விளங்குகின் றனவே!

(29)

याभ्यां कालव्यवस्था भवति तनुमतां यो मुखं देवतानां
येषामाहुः स्वरूपं जगति मुनिवरा देवतानां त्रयीं ताम् ।
रुद्राणीवक्त्रपङ्केरुहसततविहारोत्सुकेन्दिन्दिरेभ्य –
स्तेभ्यस्त्रिभ्यः प्रणामाञ्जलिमुपरचये त्रीक्षणस्येक्षणेभ्यः ॥

யாப்யாம் கால வ்யவஸ்தா பவதி
தனுமதாம்யோ முகம் தேவதாநாம்
யேஷாமாஹு: ஸ்வரூபம் ஜகதி
முனிவரா தேவதாநாம் த்ரயீம் தாம் ।
ருத்ராணீவக்த்ரபங்கேருஹ ஸதத
விஹாரோத்ஸுகேந்திந்திரேப்ய:
தேப்ய ஸ்த்ரிப்ய: ப்ரணாமாஞ்ஜலி
முபரசயே த்ரீக்ஷணஸ் யேக்ஷணேப்ய: ॥

முக்கண்ணரின் அந்த மூன்று கண்கள் பார்வதியின் முக கமலத்தை மொய்க்கும் பெரும் கருநீல வண்டுகள்; அவை சூர்ய, சந்த்ர, அக்னி ஸ்வரூபமானவை எனவும் முனிவர் கூறுவர். சூர்ய-சந்திரர்களால் தானே பகல்-இரவு நிலை நாட்டப்படு கிறது. அக்னி தேவன் தானே தேவரின் முகமெனப் போற்றப் படுகிறார். அப்படியான மூன்று கண்களுக்கு நான் பணிவான வந்தனம் செலுத்துகிறேன்.

(30)

वामं वामाङ्कगाया वदनसरसिजे व्यावलद्वल्लभायाः
व्यानम्रेष्वन्यदन्यत् पुनरलिकभवं वीतनिःशेषरौक्ष्यम् ।
भूयो भूयोऽपि मोदान्निपतदतिदयाशीतलं चूतवाणे
दक्षारेरीक्षणानां त्रयमपहरतादाशु तापत्रयं नः ॥

வாமம் வாமாங்ககாயா வதனஸரஸிஜே
வ்யாவலத்வல்லபாயா
வ்யாநம்ரேஷ்வன்யத் அன்யத்புனரலிகபவம்
வீத நிச்சேஷ-ரௌக்ஷ்யம் ।
பூயோபூயோऽபி மோதாத் நிபதததி
தயா சீதலம் சூத பாணே
தக்ஷாரேரீணாணாம் த்ரயம்
அபஹரதா தாசு தாபத்ரயம் ந: ॥

தக்ஷனின் எதிரியான பரமேச்வரனின் மூன்று கண்களில் ஒன்று - இடது - இடது பக்கம் இருக்கும் பார்வதியின் முக கமலத்தில் பதிகிறது. தக்ஷிணமான இன்னொன்று பக்தர்களிடம் பதிகின்றது; மற்றது - நெற்றியிலுள்ளது - கொடூரத்தன்மையை முற்றிலும் விட்டது. மிக்க மகிழ்ச்சியுடன் மன்மதன் மேல் இரக்கமாகப் பதிகிறது. இப்படியான அவரது மூன்று கண்களும் எங்கள் மூன்று தாபங்களையும் போக்கட்டுமே!

(31)

यस्मिन्नर्धेन्दुमुग्धद्युतिनिचयतिरस्कारनिस्तन्द्रकान्तौ
काश्मीरक्षोदसङ्कल्पितमिव रुचिरं चित्रकं भाति नेत्रम् ।
तस्मिन्नुल्लोलचिल्लीनटवरतरुणीलास्यरङ्गायमाणे
कालारेः फालदेशे विहरतु हृदयं वीतचिन्तान्तरं नः ॥

யஸ்மின் அர்த்தேந்து முக்த த்யுதிநிசய
திரஸ்கார நிஸ்தந்த்ரகாந்தௌ
காச்மீரக்ஷோதஸங்கல்பிதமிவ
ருசிரம் சித்ரகம் பாதிநேத்ரம்।
தஸ்மின் உல்லோல சில்லீநடவர
தருணீ லாஸ்யரங்காய மாணே
காலாரே: பாலதேசே விஹரது
ஹ்ருதயம் வீதசிந்தாந்தரம் ந:॥

காலனைக் கொன்று களைந்த பரமனது அரைச்சந்திர வடிவமான நெற்றியில், காச்மீர சந்தனக்குழம்பால் தீட்டப் பட்டதுபோல் விளங்குகிறது ஒரு கண். துள்ளிக்குதித்து நடன மாடும் ஜில்லிகையின் நடனரங்கமாகவும் அந்த நெற்றி காட்சியளிக்கிறது. எங்கள் ஹ்ருதயம் வேறெதையும நாடாமல் அந்த நெற்றியில் களிக்கட்டுமே!

(32)

स्वामिन् गङ्गामिवाङ्गीकुरु तव शिरसा मामपीत्यर्थयन्तीं
धन्यां कन्यां खरांशोः शिरसि वहति किं न्वेष कारुण्यशाली।
इत्थं शङ्कां जनानां जनयदति घनं कैशिकं कालमेघ –
च्छायं भूयादुदारं त्रिपुरविजयिनः श्रेयसे भूयसे नः ॥

ஸ்வாமின் கங்காமிவாங் கீகுரு தவ சிரஸா
மாம பீத்யர்த்தயந்தீம்
தன்யாம் கன்யாம் கராம்சோ: சிரஸி வஹதி
கிம் ந்வேஷ காருண்யசாலீ!
இத்தம் சங்காம் ஜநாநாம் ஜனயதி
கனம் கைசிகம் காலமேக-
ச்சாயம் பூயாதுதாரம் த்ரிபுர
விஜயின: ச்ரேயஸே பூயஸேந:

ஸ்வாமியே! என்னையும் தலையில் ஏற்று தாங்கிக் கொள்ளலாமே என்று வேண்டும் யமுனையையும் கங்கையைப் போல் தாங்குகிறாரோ என எண்ணத்தோன்றும்படி மிக அடர்த்தி யான கருங்கூந்தல் கற்றை எங்களுக்கு வெகுவாக நன்மை பயக்கட்டுமே!

(33)

शृङ्गाराकल्पयोग्यैः शिखरिवरसुतासत्सखीहस्तलूनैः
सूनैराबद्धमालावलिपरिविलसत्सौरभाकृष्टभृङ्गम् ।
तुङ्गं माणिक्यकान्त्या परिहसितसुरावासशैलेन्द्रशृङ्गं
सङ्घं नः सङ्कटानां विघटयतु सदा काञ्चीकं किरीटम् ॥

ச்ருங்காராகல்ப யோக்யை: சிகரிவரஸுதா
ஸத்ஸகீஹஸ்தலூனை:
ஸுனை: ஆபத்தமாலா வலி பரிவிலஸத்
ஸெளரபாக்ருஷ்ட - ப்ருங்கம் ।
துங்கம் மாணிக்ய காந்த்யா பரிஹஸித
ஸுராவாஸ சைலே ந்த்ரச்ருங்கம்
ஸங்கம் ந: ஸங்கடானாம் விகடயது
ஸதா காங்கடீகம் கிரீடம் ॥

பரமேச்வரன் தலையில் அணிந்ததும், மாணிக்யகற்கள் பதித்ததும், மிக உயரமானதுமான யுத்தகால கிரீடம் எங்கள் ஸங்கடங்களை நீக்கட்டுமே! அந்த கிரிடம் சிருங்கார ஒப்பனைக்குத் தக்கதான புஷ்ப மாலைகளால் சுற்றப்பட்டும் வாசனை மிக்கதாயுமுள்ளது.

(34)

वक्राकारः कलङ्की जडतनुरहमप्यङ्घ्रिसेवानुभावाद् -
उत्तंसत्वं प्रयातः सुलभतरघृणास्यन्दिनश्चन्द्रमौलेः ।
तत्सेवन्तां जनौघाः शिवमिति निजयावस्थयैव ब्रुवाणं
वन्दे देवस्य शम्भोर्मुकुटसुघटितं मुग्धपीयूषभानुम् ॥

வக்ராகார: கலங்கீ ஜடதனு ரஹ
மப்யங்க்ரிஸேவானு பாவாத்
உத்தம்ஸத்வம் ப்ரயாத: ஸுலபதர
க்ருணாஸ்யந்திந: சந்த்ர மௌலே:!
தத்ஸேவந்தாம் ஜனௌகா: சிவமிதி
நிஜயாவஸ்தயைவ ப்ருவாணம்
வந்தே தேவஸ்ய சம்போ: முகுட
ஸுகடிதம் முக்த - பீயூஷபானும்!!

'நானோ வக்ரன், கலங்கமுள்ளவன், ஜடசரீரம் படைத்தவன், எனினும், மிக எளிதில் மனநெகிழ்ச்சி கொள்ளும் சந்த்ரசேகரனின் சேவையின் காரணமாக சிகையலங்காரமாக சிறப்பை பெற்றேன்' என்று தனது நிலைமையைச்சுட்டிக்காட்டி 'நீங்களும் சிவனை சேவியுங்களேன்' என்று கூறுவார் போல் இருக்கும் சம்புவின் மகுட பூஷணரான சந்திரனை வணங்குகிறேன்.

(35)

कान्त्या सम्फुल्लमल्लीकुसुमधवलया व्याप्य विश्वं विराजन्
वृत्ताकारो वितन्वन् मुहुरपि च परां निर्वृतिं पादभाजाम् ।
सानन्द्रं नन्दिदोष्णा मणिकटकवता वाह्यमानः पुरारेः
श्वेतच्छत्राख्यशीतद्युतिरपहरतादापदस्तापदा नः ॥

காந்த்யா ஸம்புல்ல மல்லீகுஸும தவலயா
வ்யாப்ய விச்வம் விராஜன்
வ்ருத்தாகாரோ விதன்வன் முஹு
ரபிச பராம் நிர்வ்ருதிம் பாதபாஜாம்!
ஸாநந்தம் நந்திதோஷ்ணா
மணிகடகவதா வாஹ்மான: புராரே:
ச்வேதச்சத்ராக்ய சீதத்யுதி
ரபஹரதாதா பதஸ்தாபதா ந:!!

மலர்ந்த மல்லிகையென வெள்ளை வெளேரென காந்தியுடன் உலகனைத்தையும் வியாபித்து, காலடி சேர்ந்தவர்க்கு மகிழ்ச்சி தரும் அந்த வெண்பட்டுக் குடையென்ற சந்த்ரன் எங்கள் தீய ஆபத்துக்களைப் போக்கட்டுமே. அந்த குடை, நந்திகேசரின் வளைதரித்த கையாலே சுமந்து செல்லப்படுவதும் விசேஷமாகும்.

(36)

दिव्याकल्पोज्ज्वलानां शिवगिरिसुतयोः पार्श्वयोराश्रितानां
रुद्राणीसत्सखीनां मदतरलकटाक्षाञ्चलैरञ्चितानाम् ।
उद्वेल्लद्बाहुवल्लीविलसनसमये चामरान्दोलनीनाम्
उद्धूतः कङ्कणालीवलयकलकलो वारयेदापदो नः ॥

திவ்யாகல்போஜ்வலாநாம் சிவகிரிஸுதயோ:
பார்ச்வயோ: ஆச்ரிதாநாம்
ருத்ராணீஸத்ஸகீ நாம் மததரல
கடாக்ஷாஞ்சலை ரஞ்சிதாநாம்!
உத்வேல்லத்பாஹு வல்லீ விலஸநஸமயே
சாமராந்தோலநீநாம்
உத்பூத: கங்கணாலீ வலயகலகலோ
வாரயே தாபதோ ந:!!

பார்வதீ, ஷண்முகர் இவர்களையடுத்து இருபுறமும் நின்று திவ்ய அலங்காரம் பூண்ட பார்வதீயின் தோழிகள் சாமரம் வீசுகின்றனர். அவர் கண்கள் மதத்தால் சுழலுகின்றன. அவர்கள் கையசையும் போது கங்கணம், வளை ஆகியவற்றின் கலகல சப்தம் எங்கள் ஆபத்துக்களை நீக்கட்டுமே!

(37)

स्वर्गौकस्सुन्दरीणां सुललितवपुषां स्वामिसेवापराणां
वल्गद्भूषाणि वक्त्राम्बुजपरिविगलन् मुग्धगीतामृतानि ।
नित्यं नृत्तान्युपासे भुजविधुतिपदन्यासभावावलोक –
प्रत्युद्यत्प्रीतिमाद्यत्प्रमथनटनटीदत्तसम्भावनानि ॥

ஸ்வர்கௌகஸ: ஸுந்தரீணாம் ஸுலலிதவபுஷாம்
ஸ்வாமிஸேவா பராணாம்
வல்கத்பூஷாணி வக்த்ராம்புஜபரி
விகலன் முக்தகீதாம்ருதாநி!
நித்யம் ந்ருத்தான்யுபாஸே புஜவிதுதி
பதன்யாஸ பாவாவலோக-
ப்ரத்யுத்யத்ப்ரீதி மாத்யத் ப்ரமத
நட நடீதத்தஸம்பாவநாநி!!

அடுத்து, ஸ்வாமி சேவைக்காக அங்கு வந்து, தங்கள் அழகிய மேனியில் அசைந்தாடும் ஆபரணங்களோடும், முக கமலத்திலிருந்து குழைந்து ஒழுகும் இசையோடும், அவர்களின் கைநிலை, கால்வைப்பு, பாவம் இவற்றைப் பார்த்து மகிழும் பிரமத கணங்களின் பாராட்டுக்குரலோடும் நடைபெறும் தேவமங்கையர் நடனத்தை நித்யம் உபாஸிக்கிறேன்.

(38)

स्थानप्राप्त्या स्वराणां किमपि विशदतां व्यञ्जयन्मञ्जुवीणा –
स्वानावच्छिन्नतालक्रममममृतमिवास्वाद्यमानं शिवाभ्याम् ।
नानारागातिहृद्यं नवरसमधुरस्तोत्रजातानुविद्धं
गानं वीणामहर्षेः कलमतिललितं कर्णपूरायतां नः ॥

ஸ்தானப்ராப்த்யா ஸ்வராணாம் கிமபி விசததாம்
வயஞ்ஜயன் மஞ்ஜுவீணா-
ஸ்வானாவச்சின்ன தாலக்ரமமம்ருத மிவா
ஸ்வாத்யமானம் சிவாப்யாம் ।
நானா ராகாதிஹ்ருத்யம் நவரஸ மதுர
ஸ்தோத்ரஜாதானுவித்தம்
கானம் வீணாமஹர்ஷே: கல
மதிலலிதம் கர்ண பூராயதாம் ந: ॥

அங்கு வந்த நாரத மஹர்ஷியின் பல ராகங்களில் அமைந்த நவரஸம் ததும்பிய ஸ்தோத்ர கானம் எங்கள் காதுகளுக்கு அருமையான அணிகலன்களாகட்டும். அந்த கானத்தில் வீணையின் ஒலியுடன் தாளக்ரமம் இசைந்து வருவதை சிவனும் பார்வதியும் ரஸிப்பார்கள். ஸ்வரங்கள், நிஷாதம் முதலிய இடங்களுக்கேற்ப தனித்தனியே கண்டு கொள்ள முடிந்ததாயிருக்கும்.

(39)

चेतो जातप्रमोदं सपदि विदधती प्राणिनां वाणिनीनां
पाणिद्वन्द्वाग्रजाग्रत्सुललितरणितस्वर्णतालानुकूला ।
स्वीयारावेण पाथोधररवपटुना नादयन्ती मयूरीं
मायूरी मन्दभावं मणिमुरजभवा मार्जना मार्जयेन्नः ॥

சேதோ ஜாதப்ரமோதம் ஸபதி விதததீ
ப்ராணிநாம் வாணிநீநாம்
பாணித்வந்த்வாக்ர ஜாக்ரத்ஸுலலித
ரணித ஸ்வர்ணதாலாநுகூலா ।
ஸ்வீயாராவேண பாதோதர ரவபடுனா
நாதயந்தீ மயூரீம்
மாயூரீ மந்தபாவம் மணிமுரஜபவா
மார்ஜநா மார்ஜயேந்ந: ॥

கேட்டவுடன் ப்ராணிகளுக்கும், நர்த்தனம் செய்யும் மகளிர்க்கும் மனமகிழ்ச்சியை உண்டாக்கி, கை நுனியில் தோன்றிய தெளிவான தாளக்கட்டுடன், மேகத்தின் இடி முழக்கமோவென நினைக்கும் மயில் கூட்டத்தை கிரங்கவைத்த மத்தளத்தின் மார்ஜனை எங்களது மந்த பாவத்தை அறவே துடைக்கட்டும்.

(40)

देवेभ्यो दानवेभ्यः पितृमुनिपरिषत्सिद्धविद्याधरेभ्यः
साध्येभ्यश्चारणेभ्यो मनुजपशुपतज्जातिकीटादिकेभ्यः ।
श्रीकैलासप्ररूढास्तृणविटपिमुखाश्चापि ये सन्ति तेभ्यः
सर्वेभ्यो निर्विचारं नतिमुपरचये शर्वपादाश्रयेभ्यः ॥

தேவேப்யோ தானவேப்ய: பித்ருமுனி
பரிஷத் ஸித்த வித்யாதரேப்ய:
ஸாத்யேப்யஸ்சாரணேப்ய: மனுஜ
பசுபதத் ஜாதி கீடாதிகேப்ய: ।
ஸ்ரீகைலாஸப்ரரூடாஸ்த்ருண -
விடபிமுகாஸ்சாபி யேஸந்தி தேப்ய:
ஸர்வேப்யோ நிர்விசாரம் நதி
முபரசயே சர்வபாதாச்ர யேப்ய: ॥

ஸ்ரீகைலாஸத்தில் பரமேச்வரனையண்டி வாழ்கின்ற தேவர், தானவர், ஸித்தர், வித்யாதரர், சாரணர், பித்ருக்கள், முனிவர் மற்றும் மனிதர், பசு, பக்ஷி, கீடங்கள் ஆகிய அனைவருக்கும் ஏன் மரங்கள், புல் பூண்டு வகைக்கும் வணக்கத்தை தெரிவிக்கிறேன்.

(41)

ध्यायन्नित्थं प्रभाते प्रतिदिवसमिदं स्तोत्ररत्नं पठेद्यः
किं वा ब्रूमस्तदीयं सुचरितमथवा कीर्तयामः समासात् ।
सम्पज्जातं समग्रं सदसि बहुमतिं सर्वलोकप्रियत्वं
सम्प्राप्यायुः शतान्ते पदमयति परब्रह्मणो मन्मथारेः ॥

த்யாயந்நித்தம் ப்ரபாதே ப்ரதிதிவஸமிதம்
ஸ்தோத்ரரத்னம் படேத்ய:
கிம் வா ப்ரூமஸ்ததீயம் ஸுசரித
மதவா கீர்த்தயாம: ஸமாஸாத் ।

ஸம்பத்ஜாதம் ஸமக்ரம் ஸதஸி

பஹுமதிம் ஸர்வலோகப்ரியத்வம்

ஸம்ப்ராப்யாயு: சதாந்தே பதமயதி

பரப்ரஹ்மணோ மன்மதாரே: ॥

தினந்தோறும் காலையில் இந்த ஸ்தோத்ரத்தை படிப்பவரின் புண்யத்தைச் சுருக்கமாகக் கூட சொல்லி முடியாது. எல்லா ஸம்பத்துக்களையும், ஸதஸில் வெகுமதியையும், பலரது நட்பையும், சதாயுஸையும் பெற்று கடைசியில் பரம்பொருளான பரமேச்வரரின் பதத்தையும் அடைவாரே அவர்.

ஸ்ரீசிவபாதாதிகேசாந்த வர்ணன ஸ்தோத்ரம்

முடிவு பெறுகிறது.

